# இரண்டாம் தேசியமொழி தமிழ்

## தரம் 10

## பாடத்திட்டம்

தேசிய கல்வி நிறுவகம்

2007

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 1 |
| 2.0 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | 2 |
| 3.0 | பாடத் தேர்ச்சிகள் | 3 |
| 4.0 | பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும் | 4 |
| 5.0 | கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் | 5 - 7 |
| 6.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 8 |
| 7.0 | பாடத்திட்டம் | 9 - 13 |

# இரண்டாம் தேசிய மொழி - தமிழ்

## 1.0 அறிமுகம்

பல்லின, பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்கள் தமக்கிடையே புரிந்துணர்வு, ஐக்கியம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளவும் பரந்த அறிவு, மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்திக்கொள்ளவும் மாற்றுச் சமூகங்களின் மொழிகளை அறிந்திருத்தல் பயன்மிக்கதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களமொழி பேசும் சமூகத்தவர் தமிழ் மொழியையும் தமிழ்மொழி பேசும் சமூகத்தவர் சிங்கள மொழியையும் கற்பது இரு சமூகங்களிடையிலும் புரிந்துணர்வையும் உறவையும் ஏற்படுத்த வழி செய்யும் பயன்மிக்க நடவடிக்கையாகும்.

அவ்வகையில் முதன்மொழியாகிய தாய்மொழி (சிங்களம்/தமிழ்), சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் என்பவற்றுடன் இரண்டாம் மொழியையும் (தமிழ்/சிங்களம்) கற்றல் - கற்பித்தல் அவசியம் என்பது தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இது, கற்பித்தல் உத்திகள், பாடசாலைக் கொள்கை நிகழ்ச்சித்திட்டம், மதிப்பீடு, பாடவேளைகள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இப்பாடத்திட்டத்தில் மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் பத்தாம் தர மாணவர்கள் அடையவேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுக்கான தேர்ச்சி அலகுகள் படிமுறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஆசிரியர், தேர்ச்சி அலகுகளின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உத்திகளைக் கையாளவேண்டும்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- தொடர்பாடல் தேவைகளுக்காகக் கணிசமான அளவு மொழித்தகைமைகளை விருத்தி செய்தல்.

- எளிமையான தமிழ்நூல்களை வாசிப்பதன் மூலம் மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ளல்.

- கவிதைகள், பாடல்கள், கதைகள், சிறுநாடகங்கள் முதலியவற்றை இரசித்தல்.

- கற்பவர் தொடர்பூடங்கள் மூலம் இக்காலத் தகவல்களையும் மனமகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ள உதவுதல்.

- சமூக நடைமுறைகளையும், சம்பிரதாயங்களையும் விளங்கிக்கொள்வதன் மூலம் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் மேம்படுத்தல்.

## 3.0 பாடத்தேர்ச்சிகள்

- சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துக் கருத்தறிந்து பேசுவார்.
- அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு கருத்துக்களை முன்வைப்பார்.
- நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார்.
- பாடல்களைப் பொருளுணர்ந்து இசையோடு பாடுவார்.
- கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் சுயமாகவும் சிறந்த மொழியாட்சியுடனும் பேசுவார்.
- கிரகித்து விடை கூறுவார்.
- தமிழில் உள்ளவற்றைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கூறுவார்.
- சொற்றொடர்கள், வாக்கியங்கள், பந்திகளைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.
- நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வாசிப்பார்.
- பாடல்களை வாசிப்பார்.
- கிரகித்து விடையளிப்பார்.
- சொற்கள், தொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்.
- நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எழுதுவார்.
- கிரகித்து விடை எழுதுவார்.
- தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்த்து எழுதுவார்.

## 4.0 பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும்

இரண்டாம் தேசிய மொழி கற்பித்தல் தொடர்பாக பாடசாலையில் கிடைக்கின்ற பௌதீக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு செயற்படுவது அவசியம்.

- பாடசாலை அதிபர் அதிகளவு அக்கறையெடுத்து இரண்டாம் மொழி கற்பித்தலுக்கு வேண்டிய உதவிகளை வழங்க வேண்டும்.

- இரண்டாம் தேசிய மொழி கற்பதன் அவசியத்தை பெற்றோருக்கு மனதில் வலியுறுத்த வேண்டும்.

- வகுப்பறைக் கலைத்திட்டத்தில் இரு பாடவேளைகளே இரண்டாம் மொழியைக் கற்பிப்பதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதால் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. வீட்டு வேலைகள், ஒப்படைகள், மாணவர் மன்றக் கூட்டம், காலைக்கூட்டம், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இரண்டாம் மொழிக்கு இடம் அளித்தல்.

- மொழித்தினப் போட்டிகளில் இரண்டாம் தேசிய மொழி கற்கும் மாணவர்கள் பங்கேற்க ஊக்குவித்தல்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளைக் கையாள்வது பொருத்தமானதாகும்.

- அடிப்படை மொழித்திறன்களான கேட்டலும் பேச்சும், வாசிப்பு, எழுத்து ஆகியவற்றுக்கான தேர்ச்சிகள் இப்பாடத்திட்டத்தில் தனித்தனியாக வழங்கப்பட்டிருந்தாலும், வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின் போது ஒன்றிணைக்கப்பட்டே கற்பிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையிலேயே இக்கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமைய வேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே, கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். எனவே தான் கற்போனை மையப்படுத்தி இக்கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- இக்கலைத்திட்டம் செயற்பாடுகள் சார்ந்த கற்றலுக்கு வழியமைக்கின்றது. கற்றலின் போது மேற்கொள்ள வேண்டிய பல்வேறு செயற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பினும் பெறத்தக்க வளங்களை கவனத்திற் கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஆசிரியர்கள் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது பின்வரும் ஐந்து படிகளையும் அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.
  1. கற்றலுக்கான பிரவேசம் (Engagement)
  2. வெளிக்கொணர்தல் (Exploration)
  3. விளக்கமளித்தல் (Explanation)
  4. விரிவாக ஆராய்தல் (Elaboration)
  5. மதிப்பீடு (Evaluation)

செயற்பாட்டின் முதற் கட்டத்தில் கற்றலுக்கான பிரவேசமும் மாணவர் ஆயத்தமும் நிகழுகின்றது. இங்கு முன்னறிவை மீட்டல், பாடவிடயத்துக்கு மாணவர்களின் ஆர்வத்தை ஈர்த்தல் என்பவற்றோடு தேவையான அடிப்படை விடயங்களை வழங்குவதும் எதிர்பார்க்கப் படுகிறது.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இரண்டாவது கட்டமான ‘‘வெளிக்கொணர்தல்’ இன் போது மாணவர்கள் குழுச் செயற்பாட்டில் ஈடுபட்டுத் தேவையான விடயங்களைக் கண்டுகொள்வது எதிர்ப்பார்க்கப்படுகிறது. இங்கு குழுவினுள் கூட்டாக இயங்கி, ஒருமித்துச் செயற்படுவதற்கும், தனது அறிவைக் குழு அங்கத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதோடு தனது அறிவை மேலும் விருத்தி செய்து கொள்வதுவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாவது கட்டமான ‘‘விளக்கமளித்தலின்’’ போது மாணவர்களின் தொடர்பாடும் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் மாணவர்கள் குழுக்களில் வெளிக்கொணர்ந்த விடயங்களை ஏனைய குழுக்களுக்குச் சமர்ப்பிக்கும் செயல் நடைபெறுகிறது. இக்கட்டத்தில் ஏனைய குழுக்களின் கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகிறது.

நான்காம் கட்டமான ‘‘விரிவாக ஆராய்தலின்’’ போது ஏனைய குழுக்களின் கருத்துக்களை யும் கவனத்திற் கொண்டு பாடவிடயங்களை விருத்தி செய்து கொள்வதோடு எல்லாக் குழுக்களும் வெளிக்கொணர்ந்த விடயங்களை செயற்பாட்டின் நோக்கம் நிறைவேறும் வகையில் ஆசிரியர் தொகுத்துக் கூறுவது எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்தாம் கட்டமாக அதாவது இறுதிக்கட்டமாக அமைவது மாணவர்களை மதிப்பீடு செய்தலும் கணிப்பீடு செய்தலுமாகும். இது இறுதிக்கட்டமாகக் குறிப்பிட்டாலும் ‘‘வெளிக்கொணர்தல்’’ கட்டத்திலிருந்தே கணிப்பீடு ஆரம்பமாகிறது. இதற்காக புறம்பான நேரம் ஒதுக்கப்படுவ தில்லை.

மாணவர்கள் தொழிற்படும்போதே ஆசிரியர் கணிப்பீட்டை மேற்கொள்வது அவசியமாகும். இக்கணிப்பீட்டின்போது, கற்றல் - கற்பித்தல் நடடிவடிக்கைகள் உறுதி செய்யப்படுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

## 5.1 உத்தேச செயற்பாடுகள்

- கலந்துரையாடல்
- குழுவேலை
- சோடி வேலை
- நாடகம்
- ஒப்படைகள்
- களவேலை
- பங்கேற்று நடித்தல்
- பாத்திரமேற்று நடித்தல்
- வினா விடை

## 5.2 தர உள்ளீடுகள்

- பாடல்கள், கவிதைகள், செய்யுட்கள்
- கதைகள்
- நாடகங்கள்
- உரையாடல்கள்
- உரைச்சித்திரங்கள்
- கட்டுரைகள்
- சொல்லட்டைகள்
- கதைப்படங்கள்
- படங்கள்
- துண்டுப்பிரசுரம்
- அறிவித்தல்
- விளம்பரம்
- சுவரொட்டி
- சித்திரங்கள்
- பதாகைகள்
- துணுக்குகள்
- வானொலி
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- தொலைக்காட்சி
- மேற்றலை எறியி (OHP)
- கணினி
- இறுவட்டு
- பேனை, பென்சில், போன்ற செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பொருட்கள்



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

10 ஆம் தரத்தில் கற்கும் மாணவருக்கான இரண்டாம் மொழி அடைவு மட்டத்தை பாடசாலை மட்டக் கணிப்பீடு மூலம் அளவிடுதல் அவசியம். ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கணிப்பீட்டுச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டுமென்பது அவசியமாகும். மேலும், தவணைப் பரீட்சை, இறுதிப்பரீட்சையின் போதும் மதிப்பீடு செய்தல் அவசியம்.

- வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கேட்டல், பேச்சுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். குறிப்பாக பேசுவதற்கான, வாசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு மதிப்பிடப்பட வேண்டும்.

- தவணை இறுதிப்பரீட்சைகளின் போது எழுத்து மூலமான மதிப்பீட்டில் கூடிய கவனம் செலுத்துதல் உகந்தது.

# இரண்டாம் தேசிய மொழி தமிழ்
## பாடத்திட்டம் தரம் - 10
### தேர்ச்சி, தேர்ச்சி அலகுகள், உள்ளடக்கம்

| கேட்டலும் பேச்சும் : | | பாட வேளை |
|---|---|---|
| 1.0 | சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துக் கருத்தறிந்து பேசுவார். | |
| 1.1 | சொற்களையும் தொடர்களையும் உச்சரித்துக் கூறுவார்.<br>- ஆறுகள், மலைகள்<br>- நகரங்கள்<br>- மாகாணங்கள்(09), மாவட்டங்கள் (25)<br>- ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் (10)<br>- வாசனைத் திரவியங்கள் (10)<br>- நிறுவனங்கள் (10)<br>- அரச அலுவலகங்கள் (10)<br>- இலக்கங்கள் 1 - 1000<br>- பதவிப் பெயர்கள் (10)- (உ-ம்: அதிகாரி, பணிப்பாளர், முகாமையாளர், எழுத்தாளர், கவிஞன்)<br>- அறுவகைப் பெயர்கள் (5x6 = 30)<br>- திணை, பால், எண், இட வேறுபாட்டை உணர்த்தும் சொற்கள்<br>- மரபுப் பெயர்கள், மரபுத் தொடர்கள் (10) உறுப்புத் தொடர்பாக<br>- ஒருபொருள் பன்மொழி (20) (உ-ம்: அன்னை, மாதா, தாய்)<br>- பலபொருட் ஒருமொழி (10) (உ-ம்: ஆறு ; ஓர் இலக்கம், நதி)<br>- காலங்களை உணர்த்தும் சொற்கள் (15) (உ-ம்: நேற்று, இன்று, காலை, நாளை)<br>- பெயர் - வேற்றுமை ஏற்றல், வேற்றுமை உருபுகள் (20)<br>- இணைமொழி (05) (உ-ம்: ஏற்றத்தாழ்வு, சீரும் சிறப்பும்)<br>- இரட்டைக்கிளவி (10) (உ-ம்: கடகட, சலசல, பொலபொல)<br>- பெயரெச்சம், வினையெச்சம்<br>- ஒருமை பன்மைச் சொற்கள் (25)<br>- ஓத்தகருத்து எதிர்க்கருத்துச் சொற்கள் (20)<br>- ஐம்பாற் சொற்கள் (25)<br>- இருபாற் சொற்கள் (10) | 05 |
| 1.2 | குறித்த தலைப்புக்களின் கீழ் வாக்கியங்களை சரியாக உச்சரித்துக் கூறுவார்.<br>உ-ம்: எமது நாடு , எமது ஊர், நான் விரும்பும் பெரியார், குடையின் சுயசரிதை வேற்றுமை உருபுகளுடன் கூடிய வாக்கியங்கள் | 05 |
| 1.3 | எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இயைபுற வாக்கியங்களைக் கூறுவார்.<br>- காலம், இடம், என்பவை குறித்த சொற்கள் அமைய வாக்கியங்களைக் கூறுதல். (உ-ம்: காலை, மாலை, கொழும்பு, கண்டி)<br>- பெயரடை, வினையடைகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி வாக்கியத்தை விரித்துக் கூறுதல்.<br>- உடன்பாட்டு வினை வாக்கியங்களை எதிர்மறை வினை வாக்கியங்களாக்குதல்.<br>- தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக்கிக் கூறுதல்.<br>- கூற்று வாக்கியத்தை வினாவாக்கியமாக்கிக் கூறுதல்.<br>- ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக கூறுதல். | 05 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாட வேளை

2.0 அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு கருத்துக்களை முன்வைப்பார்.

2.1 அறிவுறுத்தல்களுக்கேற்பத் துலங்குவார். 01

- வினாப்பத்திரங்கள், பயிற்சிகளில் காணப்படுகின்ற அறிவுறுத்தல்களை விளங்கி விடையளித்தல்.

3.0 நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார்.

3.1 பண்புடன் பேசுவார்/உரையாடுவார். 03

- தமது வீட்டு வேலைகள், ஒப்படைகள், கடமைகள் பற்றிப் பேசுதல்.
- சென்றடைய வேண்டிய இடத்துக்கு ஒருவரை ஆற்றுப்படுத்தல்.
- சுக, துக்கம் விசாரித்தல்.
- வாழ்த்துத் தெரிவித்தல்.
- நண்பர்களோடு உரையாடுதல்.
- அனுதாபம் தெரிவித்தல்.
- ஆசிரியர், அதிபர் முதலானோருடன் உரையாடுதல்.

3.2 வினாக்களுக்கு விடை கூறுவார். (அன்றாடத் தேவைகள்) 01

3.3 தான் பார்த்து ரசித்த சம்பவத்தைக் விவரிப்பார். 01

உ-ம்: விளையாட்டுப்போட்டி, கலை நிகழ்ச்சி

4.0 பாடல்களைப் பொருளுணர்ந்து இசையோடு பாடுவார். 03

- பாடல்களைப் பொருள் புலப்பட கூறுதல்.
  (உ-ம்: ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, கோண கோண மலையேறி, மாணிக்க கங்கை நாடெங்கள் நாடே , ஆத்திசூடி, கொண்றை வேந்தன்)

5.0 கொடுக்கப்படும் தலைப்புக்களின் கீழ் சுயமாகவும் சிறந்த மொழியாட்சியுடன் பேசுவார்.

5.1 கொடுக்கப்படும் தலைப்புகளின் கீழ் தெளிவாகப் பேசுவார். 03

உ-ம்: நான் விடுமுறையைக் கழித்த விதம், நான் ஒரு பறவையானால், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, மழை நாள், நான் கண்ட கனவு

5.2 மரபுத் தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் முதலானவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்திப் பேசுவார். 01

உ-ம்: அருமை பெருமைகளை உணர்ந்து நடத்தல் வேண்டும்.
சீரும் சிறப்புடனும் வாழ்தலே பண்புடையாருக்கு அழகு

5.3 சுயமாகப் பேசுவார். 02

- சந்தர்ப்பத்திற்கேற்பப் பேசுதல்.
- பாத்திரமேற்று பேசுதல்.

6.0 கிரகித்து விடை கூறுவார்.

6.1 வினாக்களுக்கு விடை கூறுவார். 01

- வாசித்த பகுதியில் (பாடல், உரைப்பகுதி) கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறுதல்.
- வாசித்த பகுதியின் சுருக்கத்தைக் கூறுதல்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | பாட வேளை |
|---|---|
| 6.2 அரும்பதங்களின் பொருளைக் கூறுவார்.<br>உ-ம்: புகலிடம் - தஞ்சம் கோரிச் சென்ற இடம் | 01 |
| 6.3 பழமொழிகளின் விளக்கத்தைக் கூறுவார்.<br>உ-ம்: ஆழமறியாமல் காலை விடாதே | 01 |
| 7.0 தமிழில் உள்ளவற்றைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கூறுவார். | |
| 7.1 மொழிபெயர்த்துக் கூறுவார்.<br>- பெயர்ப்பலகைகள்<br>- தலைப்புச் செய்திகள். (பத்திரிகைகள்)<br>- அறிவுறுத்தல்கள்<br>- பந்தி<br>- படிவங்கள் | 02 |
| **வாசிப்பு** | |
| 8.0 சொற்றொடர்கள், வாக்கியங்கள், பந்திகளைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார். | |
| - சொற்கள், சொற்றொடர்களைத் தெளிவாக வாசித்தல்.<br>உ-ம்: ஆறுகள், மலைகள்<br>நகரங்கள்<br>மாகாணங்கள், மாவட்டங்கள்<br>ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்<br>- பதவிப் பெயர்கள் - (உ-ம்: அதிகாரி, பணிப்பாளர், முகாமையாளர், எழுத்தாளர், கவிஞன்)<br>- நிறுவனங்கள்<br>- அரச அலுவலகங்கள்<br>- இலக்கங்கள்<br>- அறுவகைப் பெயர்கள்<br>- திணை, பால், எண், இட வேறுபாடுகளை உணர்த்தும் சொற்கள்<br>- மரபுப் பெயர்கள்,மரபுத் தொடர்கள் (உறுப்புக்களுடன் கூடியவை)<br>- ஒருபொருள் பன்மொழி (உ-ம்: அன்னை, மாதா, தாய்)<br>- பலபொருள் ஒருமொழி (உ-ம்: ஆறு - ஓர் இலக்கம், நதி)<br>- காலங்களை உணர்த்தும் சொற்கள் (உ-ம்: நேற்று, இன்று, காலை, நாளை)<br>- பெயர் - வேற்றுமை ஏற்றல், வேற்றுமை உருபுகள்<br>- இணைமொழி (உ-ம்: ஏற்றத்தாழ்வு, சீரும் சிறப்பும்)<br>- இரட்டைக்கிளவி (உ-ம்: கடகட, சலசல, பொலபொல)<br>- பழமொழிகள்<br>- சொற்களைச் சேர்த்தும் தொடர்களைப் பிரித்தும் தெளிவாக வாசித்தல்<br>- தனிவாக்கியங்களும் தொடர் வாக்கியங்களும்<br>- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்.<br>காற்புள்ளி ( , ) அரைப்புள்ளி ( ; )<br>முக்காற்புள்ளி ( : ) முற்றுப்புள்ளி ( . )<br>- கதைகள், கவிதைகள், நாடகங்களை உணர்வுபூர்வமாக வாசித்தல். | 02 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | | பாட வேளை |
|---|---|---|
| 9.0 | நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வாசிப்பார்.<br>- கடிதங்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- பெயர்ப்பலகைகள்<br>- விளம்பரங்கள்<br>- விலைப்பட்டியல்கள் | 02 |
| 10.0 | பாடல்களை வாசிப்பார்.<br>(உ-ம்: ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, கோண கோண மலையேறி, மாணிக்க கங்கை நாடெங்கள் நாடே , திருக்குறல் பாக்கள் ஐந்து)<br>- பாடலின் பொருளைச் சுருக்கமாக எழுதி வாசித்தல்.<br>- இசையோடு பாடுதல்.<br>- பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் எழுதி வாசித்தல்.<br>- சுருக்கம் | 02 |
| 11.0 | கிரகித்து விடையளிப்பார். | 02 |
| 11.1 | வாசித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>- விளம்பரங்கள்<br>- படிவங்கள்<br>- துண்டுப் பிரசுரங்கள்<br>- பத்திரிகைகள்<br>- கதைகள்<br>- கவிதைகள்<br>- விடுகதைகள்<br>- துணுக்குகள் | |
| 11.2 | பாடத்தை வாசித்துக் குறிப்பெடுத்தல் | 02 |
| 11.3 | வாசித்தவற்றின் மையக் கருத்தை எழுதி வாசித்தல்<br>- மொழிபெயர்த்தவற்றை வாசித்தல் | 02 |
| **எழுத்து** | | |
| 12.0 | சொற்கள், தொடர்கள், வாக்கியங்களை எழுதுவார். | |
| 12.1 | சொற்கள், சொற்றொடர்களை எழுதுதல்.<br>- ஆறுகள், மலைகள்<br>- நகரங்கள்<br>- மாகாணங்கள், மாவட்டங்கள்<br>- ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்<br>- நிறுவனங்கள்<br>- அரச அலுவலகங்கள்<br>- பதவிப் பெயர்கள் - (உ-ம்: அதிகாரி, பணிப்பாளர், முகாமையாளர், எழுத்தாளர், கவிஞன்)<br>- இலக்கங்கள்<br>- அறுவகைப் பெயர்கள்<br>- திணை, பால், எண், இட வேறுபாடுகளை உணர்த்தும் சொற்கள்<br>- மரபுப் பெயர், மரபுத் தொடர்<br>- ஒருபொருள் பன்மொழி (உ-ம்: அன்னை, மாதா, தாய்)<br>- பலபொருள் ஒருமொழி (உ-ம்: ஆறு - ஓர் இலக்கம், நதி) | 04 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | பாட வேளை |
|---|---|
| - காலங்களை உணர்த்தும் சொற்கள்<br>(உ-ம்: நேற்று, இன்று, காலை, நாளை)<br>- பெயர் - வேற்றுமை ஏற்றல், வேற்றுமை உருபுகள்<br>- இணைமொழி (உ-ம்: ஏற்றத்தாழ்வு, சீரும் சிறப்பும்)<br>- இரட்டைக்கிளவி (உ-ம்: கடகட, சலசல, பொலபொல)<br>- பழமொழிகள்<br>- ஒருமை பன்மைச் சொற்கள் (25)<br>- ஓத்தகருத்து எதிர்க்கருத்துச் சொற்கள் (25)<br>- ஐம்பால் சொற்கள் (25)<br>- இருபாற் சொற்கள் | |
| 12.2 கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் சுயமாகவும், சிறந்த மொழியாட்சியுடனும் எழுதுவார்.<br>- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் எழுதுதல்<br>(உ-ம்: எமது நாடு , எமது ஊர், குடையின் சுயசரிதை<br>நான் விரும்பும் பெரியார்)<br>- நிறுத்தக் குறிகளை அனுசரித்து எழுதுதல்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இயைபுற எழுதுதல்.<br>- தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக்கி எழுதுதல்<br>- தொடர் வாக்கியத்தைத் தனிவாக்கியமாக்கி எழுதுதல்<br>- உடன்பாட்டு வினை வாக்கியங்களை எதிர்மறை வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுதல்<br>- ஏவல் வாக்கியங்களை எழுதுதல்<br>- கூற்று வாக்கியத்தை வினாவாக்கியங்களாக எழுதுதல்<br>- மரபுத் தொடர்களைக் கையாண்டு வாக்கியங்கள் எழுதுதல் | 04 |
| 13.0 நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எழுதுவார்.<br>- கடிதங்கள் (உறவு, தொழின்முறை)<br>- விளம்பரங்கள் எழுதுதல்.<br>- படிவங்களைப் பூர்த்தி செய்தல்.<br>- அழைப்பிதழ்கள் | 04 |
| 14.0 கிரகித்து விடை எழுதுவார்.<br>- பந்தியைக் கிரகித்து அதன் கீழ் தரப்படும் வினாக்களுக்கு விடை எழுதுதல்.<br>- பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.<br>- பாடலின் பொருளை எழுதுதல்.<br>- பழமொழிகளின் விளக்கத்தை எழுதுதல்.<br>- சுருக்கம் | 04 |
| 15.0 தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்த்து எழுதுவார்.<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- பதவிகள், அலுவலகங்களின் பெயர்கள்<br>- வாக்கியங்கள்<br>- சிறிய பந்திகள்<br>- அறிவித்தல்கள்<br>- விளம்பரங்கள்<br>- தலைப்புச் செய்திகள் | 04 |
| 15.1 தமிழிலுள்ள பழமொழிகளுக்கு இணையான சிங்களப் பழமொழிகளை அதன் பொருளை தமிழில் எழுதுவார். | 04 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.